முன்னாள் அதிபர் திரு.இ.புவனேந்திரன் அவர்களின் சேவை (2011-2013) நினைவாக......

# சாரல்


இதழ்: 05

தைத்திங்கள் 2013

வள்ளுவர் ஆண்டு 2045

**OBA** ஆண்டு செய்தி மடல்

30.06.2013

பழையமாணவர் சங்கம்

தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி


## எனது பார்வையில் அதிபர் திரு. இ. புவனேந்திரனது பணிகள்

-அதிபர் செ.பத்மசீலன்-

குன்றில் வீற்றிருக்கும் கோணைநாதர் மாதுமை சமேதரராய் அருள்பாலிக்கும் திருக்கோணமலையில் வான்புகழ் கொண்ட தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியில் நிறைவாக பணியாற்றி ஓய்வு பெற்றிருக்கும் எமது முன்னாள் அதிபர் திரு.இரத்தினம் புவனேந்திரன் அவர்களது சேவைக்காலம் பணி வரலாற்றினை மீட்கும் போது இவர் யாழ்மண்ணில் அவதரித்து தனது ஆரம்பக்கல்வியை பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்திலும் இடைநிலைக்கல்வியை மகாஜனாக்கல்லூரியிலும் கற்றுத் தேறினார்.

சேவை வரலாற்றின் கால்கோள் பணி அரசநிலஅளவையாளர் பணியாகும். அப்பணி எச்சிறப்பு வாய்ந்ததாயினும் கல்விப்பணி ஈடுபாட்டின் உந்துதலால் ஆசிரியப்பணியில் துலங்க அவாக் கொண்டு மயிலிட்டி றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயத்திலும் இளவாலை கன்னியர் மட மகா வித்தியாலயம், மாத்தளை பாக்கிய மகா வித்தியாலயம் ஆகியவற்றிலும் தனது பணியை சிறக்கச் செய்தார்.

அதன் பின் எமது கல்லூரிக்கு 1985 இல் இடமாற்றம் பெற்று வந்தார். பயிற்றப்பட்ட கணித ஆசிரியராக இருந்த போதிலும் உயர்தர வகுப்பில் பௌதிகவியல் பாட ஆசிரியராக சிறந்து விளங்கியதுடன், மாகாண நிலையில் க.பொ.த உயர்தர பௌதீகவியல் வளவாளராகவும் திகழ்ந்தார். 1991 இல் அதிபர் தரத்தை போட்டிப் பரீட்சை மூலம் பெற்றுக் கொண்டார். இதன் காரணமாக எமது கல்லூரியில் ஆரம்பப்பிரிவு சிறந்த முறையில் ஒழுங்கமைக்கப்பட்டு தனித்தியங்கக்கூடிய ஓர் பகுதியாக அமைய வழிகாட்டினார்.

அந்நாள் பணி நகர்வில் 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளில் உயர்ந்த அடைவுமட்டங்களை அடைய அடிக்கல்லானார். அத்தோடு குருளைச் சாரணர் அமைப்பு, ஆரம்பப்பிரிவு பாண்ட் வாத்திய குழு என்பவற்றை செவ்வனே அமைத்தார்.

நுண்மாண் நுழை புலம் மிக்க இவரது மொழியறிவு, நுண்ணறிவு, பட்டறிவினால் கண்டார்வியக்கும் கணினித்துறையிலும் கச்சிதமாய் செயலாற்றிவரும் நாட்களில் 2005ம் ஆண்டு முதல் எமது கல்லூரியின் நிதி நிர்வாகத்திற்கு பிரதி அதிபராகப் பொறுப்பேற்க வேண்டிய கடப்பாடும் ஏற்பட அப்பதவி நாட்களிலும் இறுதியாக அதிபராகப் பொறுப்புடன் பயணித்த நாட்களிலும் இவரது வகிபங்குகள் எண்ணற்றவை என்பது வெள்ளிடைமலை.

மேலும் இலைமறைகாயாக ஒளிந்து கிடக்கும் மாணவரது கற்றல் திறன்களை வெளிக்கொணரும் வகையில் ஆசிரிய குழுக்களை இணைத்து குழுவேலைச் செயற்பாட்டூடாக அதீத பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ள துணையாளராய் மிளிர்ந்தார்.

இவ்வாறு கங்கணங்கட்டி, தன்னிகரற்ற தரமான பணியைச்செய்து தரணி போற்றும் வண்ணம் அதிபராக பணியாற்றிய பெருமையை எம்முன்வைத்து உயர்த்திப் பார்க்கிறோம். உணர்ந்து போற்றுகின்றோம்.

### தூரநோக்கு

ஒழுக்க விழுமியங்களிலும், கல்வியிலும், மொழியியல் தேர்ச்சியிலும்,
இணைப்பாடவிதானங்களிலும் சாதனை படைக்கும் ஒரு முன்மாதிரியான கல்லூரி

### நோக்கு

கல்லூரியின் அடைவுகளை உச்சப்படுத்துவதற்கும், தேவையான வளங்களைத் தேடிக்கொள்வதற்கும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வாழும் பழைய மாணவர்களினதும் வளவாளர்களினதும் பங்களிப்புடன் கூடிய சேவை அர்ப்பணிப்பு.

### Vision

"An exemplary College in creating best records in discipline, education, Lingual proficiency and co-curricular activities."

### Mission

"Dedication of Service with the contribution of the resource persons and the old students living in inland and abroad for Obtaning the required resource and Maximizing the achievements of the college"


வெளியீடு : OBA, Trinco, Hindu
e-mail : oba@trincohindu.sch.lk
Web : www.trincohindu.sch.lk/oba/index.htm

ஆலோசகர் : திரு.செ.பத்மசீலன்
பதிப்பாசிரியர் : திரு.ச.பாரதிநாதன்
உதவி பதிப்பாசிரியர் : திரு.ச.சிறிதரகுமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குச் சந்தை வெற்றி வாய்ப்புக்கள்

உலகின் ஜாம்பவான் நிறுவனங்களான Sony, IBM, Microsoft, Nokia, HP இல் இருந்து உள்ளூர் சரக்கு வியாபாரிகள் வரை கோடிப் பணத்துடன் வந்தவர்கள் என யாரும் இல்லை. வெறும் கையளவு பணத்துடனும், கடலளவு கனவுகளுடனும் தொழிலை ஆரம்பித்து உச்சத்தை அடைந்தவர்கள் தான் அவர்கள். அவர்களது பில்லியன் டாலர் கனவுகள் எப்படி மெய்ப்பட்டது? எப்படித்தான் உங்கள் மூளையைக் குடைந்தாலும் நீங்கள் அறிய வேண்டியது நுனி நாக்கினால் அலாதியாக உச்சரிக்கப்படும் Stock Market என்ற சொல்தான். அதைத் தமிழ் அகராதி பங்குச் சந்தை என்கின்றது. ஆனாலும் இலங்கைத் தமிழில் அதிகம் பேசப்படாத சொல். இலங்கைத் தமிழர்களைப் போலவே தமிழ் செய்தி ஊடகங்களும் இது குறித்து அதிகம் அலட்டிக் கொள்வதாகத் தெரியவில்லை. ஆனால் பங்குச் சந்தை என்பதுதான் உலகப் பொருளியல் தளத்தின் சுழற்சி மையம்.

உங்களிடமும் ஒரு மிகச் சிறந்த தொழிற் திட்டம் இருக்கின்றது. அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் தொழிற் துணிவும் கண்ணில் பளிச்சென்று தெரிகின்றது. ஆனாலும் பற்றாக்குறையாக இருப்பது மில்லியன்கள் மாத்திரம் தான் என்றால் நீங்கள் ஒரு தடவைக்கு இரு தடவைகள் "சோனி" SONY வளர்ந்த கதை அல்லது பில் கேற்றின் வரலாற்றை வாசியுங்கள். அவர்களது கனவு பங்குச் சந்தையில் எப்படி நனவாகியது என்பதை வரிக்கு வரி அறிவீர்கள். அவர் எழுதிய MADE IN JAPAN கல்லூரிகளுக்கு மாத்திரமல்ல, நாடாளுமன்றத்திலும் பாடப்புத்தகமாக இருக்கவேண்டிய மிக அற்புதமான நூல். தமிழிலும் கிடைக்கின்றது. இப்போது நேரடியாகவே பங்குச் சந்தைக்கு வாருங்கள். சோனி நிறுவனத்தின் உரிமையாளர் அகியோ மொரிடா AKIO MORITA ஒரு கட்டத்தில் $5 அமெரிக்க டொலர்களைத் திரட்ட முடியாமல் திணறி இருக்கின்றார். பங்குச் சந்தை குறித்து அடிப்படையைப் புரிந்து கொள்வதற்கு முன்பாக AKIO MORITA என்ன சொல்கின்றார் என்பதையும் ஒரு தடவை கேட்டுப்பாருங்கள்.

"ஜப்பானில் செல்வ வளர்ச்சி ஏற்பட்டுக் கொண்டிருந்தாலும், பணம் திரட்டுவது அதிக சிரமமாக இருந்தது. நண்பர்களையும், அறிமுகமானவர்களையும் முதலீட்டுக்கு நம்ப வேண்டியிருந்தது. இந்த விடயத்தில் நாங்கள் அதிர்ஷ்டசாலிகளாக இருந்தோம்.எங்களுக்கிருந்த ஆலோசனைக் குழுவினர் செல்வாக்குப் படைத்தவர்கள். முதலீடு செய்கின்றவர்களை அவர்கள் எங்களுக்கு அறிமுகப்படுத்தினார்கள். எங்கள் ஆலோசனைக் குழுவில் அங்கம் வகித்த சிலர் வங்கித் தலைவர்களாகவும், நிதி நிறுவனத் தலைவர்களாகவும் இருந்தார்கள்." எந்தவொரு நிறுவனமும் தன் வளர்ச்சிச் சிறகுகளை விரிக்க அதிக நிதியைக்கொண்டிருக்க வேண்டும். அந்த நிறுவனம் பொதுமக்களைத் தங்கள் நிறுவனத்தின் பங்காளர்களாக சேர்த்துக் கொள்வதன் மூலமே தான் விரும்பிய பணத்தை திரட்டமுடியும். எப்படி பங்காளர்களை அதிகளவில் சேர்த்துக்கொள்ள முடியும்? முதலில் உங்கள் தொழிற் திட்டம், உற்பத்தி, அதற்குத் தேவையான தொகை என்பன குறித்து மிகவும் நம்பகமான அறிக்கை எழுதப்பட்டு செய்தித்தாள்களில் விளம்பரப்படுத்த வேண்டும். அதில் மிகவும் நம்பகமான கணக்காளர் நிறுவனம் ஒன்று உங்கள் கணக்கு அறிக்கைகளை கண்காணிப்பது குறித்து தெரியப்படுத்த வேண்டும். இந்த வரியை நான் நூறு தடவை சொன்னதாக எடுத்துக் கொள்ளுங்கள். ஏனெனில், இது உங்கள் மீது நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் ஒரு பலமான உத்தி. உங்களுக்குத் தேவையான பணம் ஒரு மில்லியன் டாலர் என வைத்துக்கொண்டால் எந்தவொரு தனிமனிதனோ அல்லது ஒரு தனி நிறுவனமோ உங்களை நம்பி அந்தத் தொகையை தரப்போவதில்லை. எனவே அந்த ஒரு மில்லியன் தொகையை ஒரு மில்லியன் பங்குகளாகப் பிரித்துவிட்டு பங்குகளை விற்பனை செய்ய ஆரம்பித்தால் பலர் தங்கள் விருப்பத்திற்கேற்ப முடிந்தளவு பணத்தைக் கொடுத்து பங்காளர்களாக சேர்ந்துகொள்வார்கள். என்னிடம் இருக்கும் 50 டாலரில் நானும் உங்கள் நிறுவனத்தின் ஒரு குட்டி முதலாளி ஆகலாம். உங்கள் நிறுவனம் நேரடியாகப் பொதுமக்களுக்கு விற்பனை செய்யும் பங்குகளை ஆங்கிலத்தில் IPO (Initial Public Offerings) என அழைப்பார்கள். ஆரம்பத்தில் உங்கள் நிறுவனத்தின் செய்தித்தாள் அறிக்கைகளை நம்பி உங்கள் பங்குகளை வாங்க மக்கள் அலைமோதுவார்கள் என்று கற்பனை பண்ணிவிடாதீர்கள். மீண்டும் சோனி நிறுவனத்தின் உரிமையாளர் AKIO MORITA உங்களுக்கு என்ன சொல்கின்றார் என்பதை கேட்டுப்பாருங்கள்.

"1960 பிப்ரவரி மாதத்தில் சோனி கார்ப்பரேஷன் ஆ.்.ப் அமெரிக்கா ஐந்து இலட்சம் டாலர் மூலதனத்துடன் நிறுவப்பட்டது. இருபது லட்சம் பங்குகளை ஐரோப்பிய மார்க்கெட்டில் விற்பனைக்கு ஏற்பாடு செய்தோம். ....... அமெரிக்காவில் எங்கள் கம்பனி பங்குகளை நாங்கள் விற்றிருந்ததால் ஜப்பானிய பங்கு மார்கெட் நிலவரங்களை கவனத்தில் வைத்து பல காரியங்களை செய்ய வேண்டியிருந்தது. இதனால் இரவு வெகு நேரம் கண் விழிக்க வேண்டிய கட்டாயமும் இருந்தது. டோக்கியோ பங்கு மார்க்கெட் பிற்பகல் 3 மணிக்கு மூடப்படும். அப்போது நியூயார்க்கில் நள்ளிரவு 2 மணி ஆதலால் டோக்கியோ பங்கு மார்கெட் கடைசி நிலவரத்தை தெரிந்துகொள்ள நியூயார்க்கில் இரவு 2 மணி வரை கண்விழித்திருப்பது அவசியமாயிற்று. இந்தக் கடின உழைப்புக்கு மிகுந்த பலன் இருந்தது. எங்கள் கம்பனியின் பங்குகளுக்கு அமெரிக்காவில் மிகுந்த மரியாதை ஏற்பட்டது."

"நாங்கள் சிறிய கம்பனி என்பதால் எங்கள் கம்பனியில் பங்குகள் வாங்க சில பிரமுகர்கள் தயக்கம் காட்டினார்கள். எங்களை ஒதுக்கிவிட்டு வேறு கம்பனிகளில் ஆர்வத்தோடு பங்கு வாங்கியவர்களும் இருந்தார்கள். எங்கள் கம்பனி பெரிய வளர்ச்சி பெற்றபோது, எங்கள் கம்பனியில் பங்கு வாங்கியவர்கள் பெரும் பணக்காரர்கள் ஆனார்கள்."

உலகின் மிகப் பெரிய நம்பிக்கை நிறுவனமான "சோனி" ஆரம்பத்தில் எதிர்கொண்ட அச்சமும் நெருக்கடியும் தகர்க்கப்பட்டு பங்கு வணிகத்தில் உச்சத்தை தொட்டிருக்கிறது. உங்கள் மனதில் நம்பிகையை ஏற்படுத்துவதற்காக சோனியின் அனுபவத்தை சொல்ல வரவில்லை. அவருடைய வெற்றிக்குப் பின்னால் இருந்த "நேர்மையும் கடின உழைப்பும் அறிவியல் கனவுகளும்" தான் "சோனி" தலை நிமிரக் காரணமே தவிர, வாகை மரத்தடி கிளி ஜோசியனின் ஜக்கம்மாவோ அல்லது நியூமோரலஜியோ சுத்தமாக இல்லை என்பதைச் சுட்டிக்காட்டவே.

நீங்கள் உங்கள் நிறுவனத்தின் பங்குகளை விற்பனை செய்தால் அதனை வாங்கும் நான் உங்கள் நிறுவனத்தின் குட்டி முதலாளி ஆகிவிடுவேன். உங்கள் நிறுவனம் இலாபத்தில் இயங்கினால் என் பங்கின் விகிதாசாரத்திற்கேற்ப வருமானதின் ஒரு பகுதி எனக்கு ஆண்டுதோறும் இலாபமாக தந்துகொண்டே இருக்கவேண்டும். உங்கள் நிறுவனம் நட்டமடைந்தால் அல்லது நட்டத்தினால் மூடப்பட்டால், நான் முதலிட்ட பணத்தை இழக்க வேண்டியேற்படும். ஏனெனில் உங்கள் நிறுவனத்தில் நானும் ஒரு குட்டி முதலாளி என்பதை மறந்துவிடாதீர்கள். ஆகவேதான் பங்குச் சந்தை என்று பேச்சை ஆரம்பிக்கும் போது ஆங்கிலத்தில் RISK என்ற சொல்லையும் சேர்த்துப் பயன்படுத்துவார்கள். RISK என்ற ஆங்கிலச் சொல்லுக்கு பொருத்தமான தமிழ்ச்சொல் இதுவரை தமிழ் அகராதிகளில் காணவில்லை என்பதுதான் சோகம். RISK என்பதை ஆபத்து என்று பலர் தவறாக மொழிபெயர்த்துவிடுவது மற்றொரு சோகம். RISK என்பது ஆபத்து நிறைந்த வாய்ப்பு என ஒரு தேவைக்காக விளக்கலாம். தமிழிலும் தட்டுப்பாடு உண்டு. ஒன்றைச் செய்யும் போது பலன் கிடைக்கலாம் அல்லது கைநழுவிப் போகலாம். பங்கு வணிகம் என்பது சேமிப்பு நடவடிக்கை இல்லை. ஒரு தொழில் முயற்சி அவ்வளவே. உங்கள் முதலீட்டுக்கு சேமிப்புக்கணக்குப் போன்று உத்தரவாதம் என்ற பேச்சுக்கே இடமில்லை. அதில் இலாபமும் நட்டமும் எதிர்பார்க்க வேண்டும் என்பது தான் இதன் அரிச்சுவடி..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் நிறுவனம் அதிக இலாபத்தில் வளர்ச்சியடைய உங்கள் நிறுவனப் பங்குகளை வாங்க அதிகளவில் போட்டி ஏற்படும். நீங்கள் $1 டாலருக்கு ஆரம்பத்தில் விற்பனை செய்த பங்கை வைத்திருக்கும் ஒருவரிடம் இருந்து மற்றுமொருவர் அதிக விலை கொடுத்து வாங்க முற்படுவார். அப்போது அந்த விற்பனை அல்லது பரிமாற்றம் நிகழும் இடம் தான் பங்குச்சந்தை. இங்கே தரகர் மூலம் பரிமாற்றங்கள் நிகழும். அதிக விலையேற்றமும் அதிக விலை வீழ்ச்சியும் பங்குச் சந்தையில் பலத்த சலசலப்பையும், கூச்சலையும் உருவாக்கும். மகிழ்ச்சியிலும் இழப்பிலும் மனிதர்கள் கூச்சலில் உணர்ச்சியை வெளிப்படுத்துவது காட்டு நாகரிக காலத்தில் இருந்து தொடர்கின்றது.

பங்குச் சந்தையில் RISK இல்லாமல் இலாபம் பெறுவது எப்படி? ஒரு உண்மையைத் தெரிந்துகொள்ளுங்கள். RISK இல்லாத வாழ்க்கை இந்த உலகில் கிடையாது. ஆனால் முடிந்தவரை RISK ஐ குறைத்துக் கொள்வதற்கான வழிகள் உள்ளன என்பதையும் மறந்துவிடாதீர்கள். நீங்கள் சிறுகச் சேர்த்த சேமிப்புக்களை முதலிடும்போது சில விதிகளை மனதில் வைத்துக்கொள்ளுங்கள்!!!

"நன்கு ஓடும் குதிரையில் முதலிடுங்கள். குதிரை வேகமாக ஓடிக் கொண்டிருக்கும் போதே அதை விற்றுவிடுங்கள்." மிக வேகமாக வளர்ச்சியடையும் நிறுவனப் பங்குகள் அதிக விலையில் இருந்தாலும் வாங்குங்கள். அந்தப் பங்குகள் அதிக மதிப்புடன் இருக்கும்போதே விற்றுவிடுங்கள். உங்கள் குழந்தைகள் மீது வைத்திருக்கும் பாசம்போன்று பங்குகளைத் தொடர்ந்தும் உங்களுடன் வைத்திருக்க விரும்பாதீர்கள். அது இலவமரத்தில் கிளி படித்த பாடமாகிவிடும்.

"உங்களிடம் இருக்கும் அனைத்து முட்டைகளையும் ஒருபோதும் ஒரே கூடையில் வைக்காதீர்கள்". உங்கள் பணத்தை ஒரு இடத்தில் முதலிடாமல் பிரித்து வேறு இடங்களிலும் முதலிடுங்கள். ஒன்றில் இழப்பு ஏற்பட்டால் உங்கள் முதலீட்டை முற்றாகப் பாதிக்காது. வேறொன்றில் இலாபம் கிடைத்துவிடப் போகின்றது.

பங்கு வணிக வளர்ச்சி வரைபடங்களையும், தரவுகளையும் தினமும் உன்னிப்பாகக் கவனியுங்கள். வரைபட அறிவு இல்லாமல் பங்கு வணிகத்தில் இறங்குவது ஆற்று நிலங்களில் திடலாகத் தெரியும் "மண் குதிசலில்" கால் வைப்பது போன்றது. மிக ஆபத்தானது.

உங்கள் பங்குகளின் பெறுமதியை ஒரு நிறுவனத்தின் உற்பத்தி மாத்திரம் தீர்மானிப்பதல்ல. பொருளாதார அரசியற்காரணிகளும் தீர்மானிக்கும் என்பதால் உலக நடப்புகளையும் தேடித் தெரிந்து கொள்ளுங்கள்.

EPS (Earnings per share), P/E (Price /Earnings share ratio), ROE ( Return on equity), Blue Chip, போன்ற பல சொற்களை அவற்றின் பொருளாதார நுட்பத்துடன் தெரிந்துகொள்ளுங்கள்.

நீங்கள் வாங்கிய பங்குகள் 8%ற்கு மேல் வீழ்ச்சியடைந்தால் பங்குகளை விற்று சிறிய இழப்புடன் முதலைக் காப்பாற்றுங்கள். அது கரடிச் சந்தையின் தொடக்கமாக இருக்கலாம்.


"ரோம் நகரம் ஒரே நாளில் கட்டப்பட்டதல்ல". சிறியளவில் முதலிட்டு அதில் இருந்து கிடைக்கும் பட்டறிவுக்கு ஏற்ப படிப்படியாக முதலீட்டை அதிகரிப்பது நல்லது. இருப்பதை எல்லாம் கொட்டி ஒரே நாளில் திடீர் பணக்காரராக முயல்வது ஆபத்தாகிவிடும்.

பங்குச் சந்தை முதலீடு என்றால் என்ன என்று புரிந்து கொள்ளாத வரை முதலீடு என்பது உணர்ச்சி மயமாகவே இருக்கும். தரவுகளையும் மதிப்பீடுகளையும் அலட்சியப்படுத்தும் வேளைகளில் கணிப்பீடுகள் தோல்வியடைகின்றன. தீர்மானிக்க கற்றுக்கொள்வதன் மூலமே உணர்ச்சிகரமாக முதலிடுவதை தவிர்த்துக் கொள்ளமுடியும். முதலிடுவதற்கு முன்பு நல்ல நூல்களைத் தேடவேண்டும். இது என் தேடலில் கிடைத்த உண்மை.

- கலாநிதி. கனகசபாபதி சரவணபவன் -

# பவளவிழாக் காணும் பழைய மாணவர் சங்கம்

## தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி




தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் "பவளவிழா நிகழ்வு" எதிர்வரும் ஒக்டோபர் மாதம் நடாத்துவதற்கு சங்கம் தீர்மானித்துள்ளது.

1937ம் ஆண்டு பழைய மாணவர் சங்கம் செயல்பட்டுக் கொண்டு இருந்தமைக்கான ஆதாரத்தினை அருகில் இருக்கும் ஆவணம் புலப்படுத்தி நிற்கின்றது.

1937 - 2012 அகவை எழுபத்தைந்தில் 2012ம் ஆண்டில் பழைய மாணவர் சங்கம் காலடி எடுத்து வைத்தது. 2012ம் ஆண்டு இப்பவளவிழா நிகழ்வினை சிறப்புற, அழகுற கொண்டாடமுடியாமல் போனதன் விளைவால் 2013ம் ஆண்டு இந்நிகழ்வினை சிறப்புறவும், அழகுறவும் நடாத்தி முடிப்பதற்கு பழைய மாணவர் சங்கம் தீர்மானம் எடுத்துள்ளது. எனவே அனைத்துப் பழைய மாணவர்களும் ஒன்று திரண்டு வாருங்கள். வரலாற்று புகழ் கொண்ட எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்க பவளவிழா நிகழ்வினை சிறப்புற நடாத்தி முடிப்போம்.

பழைய மாணவர் சங்க உறுப்பினர்
ச.பாரதிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி மட்டக்களப்பு சிவானந்தா கல்லூரி தங்கச் சமர் 2013 (BATTLE OF THE GOLD)

கிழக்கு இலங்கையின் புகழ் பூத்த கல்லூரிகளாகிய இராமகிருஷ்ண மிஷன் தி/ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி. மட்/சிவானந்தா கல்லூரி ஆகியவற்றுக்கிடையில் நடைபெறும் தங்கச் சமர் ஆனது 1993 ஆம் ஆண்டு முதல் நடைபெற்றுவருகிறது. அக்காலத்தில் இந்துக்கல்லூரி அதிபர் திரு. சி. தண்டாயுதபாணி சிவானந்தா கல்லூரி அதிபர் திரு. விஜயரட்ணம் ஆகியோரது முயற்சியின் பயனாக திருகோணமலை சனச நிதிஉதவியாளர் திரு. வி. நரேந்திரா, துர்க்கா தொலைத்தொடர்பு நிலைய உரிமையாளர் திரு.சோ.நிமல்குமார் ஆகியோரது அனுசரணையில் "சணசதுர்க்கா கிண்ணம்" 20 ஓவர் கொண்ட மென்பந்து கிரிக்கட் போட்டியாக திருகோணமலையில் நடைபெற்றது. முதலாவது போட்டி 19.05.1993 அன்று நடைபெற்றது. இப்போட்டியில் தி/ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரி வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. இச்சமர் வருடா வருடம் மட்டக்களப்பிலும் திருகோணமலையிலும் நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இரண்டாவது போட்டி மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் (1994.05.06)இல் வன்பந்து கிரிக்கட் போட்டியாக நடைபெற்றது. இதில் சிவானந்தா கல்லூரி கிண்ணத்தைக் கைப்பற்றியது. மூன்றாவது போட்டி திருக்கோணமலையில் (1995.05.31) இனிங்ஸ் போட்டியாக நடைபெற்றது. இரண்டு இன்னிங்ஸ்களும் விளையாடி முடியாத நிலையில் இரண்டாம் நாள் போட்டி நிறைவு பெற்றது. முதல் இன்னிங்ஸில் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி அதிக ஓட்டங்களை, பெற்றிருந்ததன் காரணத்தால் கிண்ணம் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரிக்கு முதல் இன்னிங்ஸ் வெற்றிக்காக வழங்கப்படடது. போட்டி ஒன்றிற்கு மேற்பட்ட நாட்கள் இடம் பெற்றதில் மாணவர்கள் சிரமத்தை நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 1996 முதல் 30 ஓவர் போட்டியாகவும் 1997 முதல் 40 ஓவர் போட்டியாகவும் இடம்பெற்றது. தற்போது 50 ஓவர் போட்டியாக நடைபெற்று வருகின்றது. நான்காவது போட்டியில் இரண்டு பாடசாலைகளும் இணைந்த புதிய கிண்ணம் ஒன்றைத் தயாரித்து விளையாடினர். தொடர்ந்து மூன்று (1999 2000 2001) வருடங்கள் ஒரே அணி வெற்றி பெற்றதன் காரணத்தால் 2002ம் வருடம் மீண்டும் புதிய கிண்ணம் தயார் செய்யப்பட்டது. இதற்கு சுவாமி விபுலாநந்தர் கிண்ணம் எனப் பெயரிடப்பட்டது.

திருக்கோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி அதிபர்கள் வழியில் திரு.சி.தண்டாயுதபாணி, திரு.மா.இராசரத்தினம் திரு.இ.புவனேந்திரன் தற்போதைய அதிபர் திரு.செ.பத்மசீலன் ஆகியோரது வழிகாட்டலிலும் மட்டக்களப்பு சிவானந்தா கல்லூரி அதிபர்கள் வழியில் திரு. கே. விஜயரட்ணம், திரு.கே ராஜரட்ணம், திரு. பொ.ஆனந்தராஜா திரு. ரி. ரவிந்திரமூர்த்தி தற்போதைய அதிபர் திரு.மனோராஜ் ஆகியோரது வழிகாட்டலிலும் தங்கச்சமர் நடாத்தப்பட்டு வந்தது. தி/ ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் பொறுப்பாசிரியர்களாக ஜனாப்.பசிர் அமிர், திரு. சி.சசிகுமார், ஜனாப்.E.K. மஃசூம் ஆகியோர் கடமையாற்றியுள்ளனர். தற்போது திரு.சி.சசிகுமார் பொறுப்பாசிரியராக செயற்படுகின்றார். சிவானந்தா கல்லூரிக்கு பொறுப்பாசிரியர்களாக திரு.மோகனகுமார், திரு.கிருபாகரன், மரியசெல்வம், திரு. சதாசிவம் ஆகியோர் கடமையாற்றியுள்ளதுடன் தற்போது பொறுப்பாசிரியராக டி.ஆர்.மரியசெல்வத்துடன் குகநாதன், செந்தூரன் ஆகியோர் வழிநடத்தி வருகிறார்.

இத்தங்கச் சமரின் (1), (3), (5), (7)வது போட்டிகளில் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி தமது மைதானத்தில் வெற்றி பெற்றது. இவ்வாறே மட்/சிவானந்தா கல்லூரி (2), (4), (6)வது போட்டிகளில் தமது மைதானத்தில் வெற்றி பெற்றது. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. சி. தண்டாயுதபாணி அவர்களின் கோரிக்கை மாற்று அணிகளின் மைதானத்தில் வெற்றிக்கிண்ணம் பெறப்படல் வேண்டும் என்பதாகும். அதற்கு அமைவாக தி/ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி ஆனது 2000 ஆம் ஆண்டில் தனது வெற்றியை மட்/சிவானந்தா கல்லூரி மைதானத்தில் பதிவாக்கிக் கொண்டது. மட்/சிவானந்தா கல்லூரியும் 2007ஆம் ஆண்டில் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி மைதானத்தில் தனது வெற்றியை பதிவாக்கிக் கொண்டது.

இவ்விரண்டு கல்லூரிகளில் தி/ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரி ஆனது 11 தடவைகளும் சிவானந்தா கல்லூரி ஆனது 8 தடவைகளும் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டன. 20வது போட்டி மட்/சிவானந்தா கல்லூரி மைதானத்தில் கடந்த 30.05.2013ம் திகதி இடம்பெற்றது.இதில் தி/ ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரி வெற்றி பெற்றது. இப்போட்டிகள் தொடர்ந்து நடைபெறுவதற்கு இரண்டு பாடசாலைகளினதும் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழையமாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் ஒத்துழைப்பு இன்றியமையாததாகும். இரண்டு சகோதர பாடசாலைகளினதும் நட்புறவைப் பேணுவதற்கு அரிய வாய்ப்பாக (Battle of the Gold) தங்கச் சமர் அமைகிறது.

இரண்டு வெவ்வேறு மாவட்டங்களுக்கு இடையே நடைபெறும் போட்டியாக இது அமைகின்றமை இராம கிருஷ்ன சங்கத்தின் குழந்தைகளுக்குப் பெருமை சேர்க்கின்றன.

நல்லதம்பி குமணன்,
உபதலைவர், பழையமாணவர் சங்கம்,

## ஓர் ஞாபகத் துளி....



எமது இந்துக்கல்லூரியில் சுவாமி விபுலானந்தரின் மாணவனாக இருந்த பழைய மாணவர் திரு.எஸ்.நடேசரெட்ணம் கனடாவில் வசித்து வருகின்றார்.இவர் கடந்த வருடம் 200 கனேடிய டொலரினை கல்லூரியின் தேவைக்காக அனுப்பி இருந்தார். 92 வயது நிரம்பிய அன்னார் தான் படித்த கல்லூரியை நினைத்து எங்களுடன் தொடர்பினை ஏற்படுத்தியிருந்தமைக்காக எங்களின் வேண்டுகோளை ஏற்று கனடா பழைய மாணவர் சங்கத் தலைவர் அப்பழைய மாணவரை சென்று பார்வையிட்டது மட்டுமன்றி அன்னாருக்கு உள்ளக்கமலம் புத்தகத்தையும் வழங்கி அன்னாரை கௌரவித்திருந்தார்.



சுற்றாடல் தினப்போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாம் இடம் பெற்ற மாணவன் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப் படுகின்றார்

பழையமாணவர் சங்கத்தின் சார்பில் இம் மாணவனை வாழ்த்துகின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2012ம் ஆண்டு A/L மற்றும் O/L பரீட்சைகளின் பெறுபேறுகள் பற்றிய ஆய்வு.

| Subject | | No. Sat | No. of A's | | No. of B's | | No. of S's | | No.of. W's | | Passed % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | No | % | No | % | No | % | No | % | |
| Religion | Saivanery | 146 | 102 | 69.86 | 17 | 11.64 | 10 | 6.84 | 6 | 4.1 | 95.89 |
| | R.C | 10 | 4 | 40 | 2 | 20 | 2 | 20 | - | - | 100 |
| | N.R.C | 3 | - | - | 1 | 33.33 | - | - | - | - | 100 |
| | Islam | 20 | 5 | 25 | 5 | 25 | 4 | 20 | - | - | 100 |
| Tamil Language | | 179 | 57 | 31.84 | 43 | 24.2 | 18 | 10.05 | 18 | 10.05 | 89.94 |
| English Language | | 179 | 39 | 21.78 | 26 | 1452 | 26 | 14.52 | 8 | 4.46 | 95.5 |
| Science & Technology | | 179 | 48 | 26.81 | 39 | 21.78 | 35 | 19.55 | 14 | 7.82 | 95.17 |
| Mathematics | | 179 | 54 | 30.16 | 26 | 14.52 | 38 | 21.22 | 24 | 13.4 | 86.59 |
| History | | 179 | 34 | 18.99 | 30 | 16.75 | 38 | 21.22 | 21 | 11.73 | 88.26 |
| OB1 | Business & Accounting Studies | 164 | 45 | 27.43 | 26 | 15.85 | 20 | 12.19 | 8 | 4.87 | 96.34 |
| | Geography | 15 | 1 | 86.66 | 8 | 53.33 | 1 | 6.66 | 2 | 13.33 | - |
| | Music | 30 | 20 | 66.66 | 8 | 26.66 | 2 | 6.66 | - | - | 100 |
| | Art | 38 | 2 | 5.26 | 4 | 10.52 | 16. | 42.1 | 8 | 21.05 | 78.94 |
| OB2 | Appreciation of English Literary Texts | 19 | 2 | 10.52 | 2 | 10.52 | 10 | 52.63 | 3 | 15.78 | 82.21 |
| | Appreciation of Tamil Literary Texts | 91 | 34 | 37.36 | 28 | 30.76 | 10 | 10.98 | 2 | 2.19 | 97.8 |
| OB3 | Information Technology | 93 | 12 | 12.9 | 16 | 17.2 | 25 | 26.88 | 18 | 19.35 | 80.64 |
| | Agriculture & Food Technology | 13 | 2 | 15.84 | 4 | 30.76 | 2 | 15.84 | - | - | 100 |
| | Physical Education | 73 | 17 | 23.28 | 21 | 28.76 | 9 | 12.32 | 1 | 1.36 | 98.63 |

**9A பெற்ற மாணவர்கள்**

Arulananthan Gowshikan, Rajendran Hoshalarajah, Sivabalasubramaniyam Arunram, Sivavarathan, Deluxsan, Ethirveerasingam Sanjeevaraj, Sooriyaperakasam Nilakshanth, Viyayarajendran Nigesh, Thevarajah Kugeshan, Sugumaran Sujan

### STREAMWISE ANALYSIS - 2012

| Stream | Attempt | No. Applied | No Sat | No of Subjects | | | | | | | | Qualified to apply fo | % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 3 | % | 2 | % | 1 | % | 0 | % | | |
| Bio - Science | 1 | 30 | 28 | 19 | 67.86 | 3 | 10.71 | 3 | 10.71 | 3 | 10.71 | 19 | 67.86 |
| | 2 | 18 | 14 | 13 | 92.86 | 1 | 7.14 | - | - | - | - | 13 | 92.86 |
| | Total | 48 | 42 | 32 | 76.19 | 4 | 9.52 | 3 | 7.14 | 3 | 7.14 | 32 | 76.19 |
| Phy - Science | 1 | 65 | 63 | 25 | 39.68 | 15 | 23.81 | 10 | 15.87 | 13. | 20.63 | 25 | 39.68 |
| | 2 | 18 | 16 | 9 | 56.25 | 3 | 18.75 | 3.00 | | 1.00 | 6.25 | 9 | 56.25 |
| | Total | 83 | 79 | 34 | 43.04 | 18 | 22.78 | 13 | 16.46 | 14 | 17.72 | 34 | 43.04 |
| Commerce | 1 | 65 | 63 | 34 | 53.97 | 9 | 14.29 | 13 | 20.63 | 7 | 11.11 | 34 | 53.97 |
| | 2 | 8 | 5 | 5 | 100.00 | - | | - | | - | | 5 | 100.00 |
| | Total | 73 | 68 | 39 | 57.35 | 9 | 13.24 | 13 | 19.12 | 7 | 10.29 | 39 | 57.35 |
| Arts | 1 | 21 | 21 | 7 | 33.33 | 2 | 9.52 | 7 | 33.33 | 5 | 23.81 | 7 | 1.00 |
| | 2 | 1 | 1 | - | | - | - | 1 | 100.00 | - | - | 1 | 100.00 |
| | Total | 22 | 22 | 7 | 31.82 | 2 | 9.09 | 8 | 36.36 | 5 | 22.73 | 8 | 36.36 |

**Maths**

1. Raveendran Nithypan - 3A

**Com**

1. Mathavanayagam Anujan - 3A 2. Sothylingam Gowrison - 3A
3. Packiyarasa Sananjayan - 3A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர். ஆசிரியர் செல்வி கு. சதாசிவம் அவர்களின் ஞாபகார்த்தமாக O/L மற்றும் A/L மாணவர்களுக்காக நடாத்தப்பட்ட விஞ்ஞான வினாவிடைப் போட்டிகளின் நிழற்படங்கள்

**செல்வி கு. சதாசிவம் ஞாபகார்த்த நிலையத்தினால் இப் போட்டிகள் நடாத்தப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது**











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2004ம் ஆண்டு தொடக்கம் இடையறாது வெகுவிமர்சையாக நடாத்தப்பட்டுவரும் பழைய மாணவர் தின நிகழ்வு 2012.06.30 அன்றும் வெகுவிமர்சையாக கொண்டாடப்பட்டது. அந் நிகழ்வின் நிழற்படங்கள்...**

பழைய மாணவர்
கலாநிதி க.சரவணபவன்
அவர்கள் வரலாற்று
அடையாளங்களை
ஆவணப்படுத்தியமைக்காக
பாராட்டி
கௌரவிக்கப்படுகின்றார்.





பழைய மாணவர்
வைத்தியர் க.உமாபதி
அவர்கள் தனது தொழிலில்
உன்னத நிலையை
அடைந்தமைக்காக
பாராட்டி
கௌரவிக்கப்படுகின்றார்.

கௌரவிக்கப்படும்
விருந்தினர்களுடன்
பழைய மாணவர் சங்கத்தின்
செயலாளர் திரு.எஸ்.சிறிதரன்,
அதிபர் திரு.இ.புவனேந்திரன்,
மற்றும் முன்னாள்
அதிபர்கள் திரு.சி.தண்டாயுதபாணி
திரு.ம.இராசரெத்தினம்.






கிழக்கு பல்கலைக்கழக
விரிவுரையாளர்
பழைய மாணவர்
திரு.மு.ரவி அவர்கள்
கௌரவிக்கப்படுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2012ம் ஆண்டு க.பொ.த சாதாரண தர பரீட்சையில் ஒன்பது பாடங்களிலும் அதி விசேட சித்திகளைப் பெற்ற மாணவர்களின் நிழற்படங்கள்


Sugumaran Sujan


Rajendran Hoshalarajah


Thevarajah Kugeshan


Sivavarathan Deluxan


Viyayarajendran Nigesh


Sooriyaperakasam Nilakshanth


Arulananthan Gowshikan


Ethirveerasingam Sanjeevaraj


Sivabalasubramaniyam Arunram

**பழைய மாணவர் சங்கம் இம்மாணவர்களை பெருமையுடன் வாழ்த்துகின்றது**



#58, Vidyalayam Road, Trincomalee.
Off: 026 2224933 Mob: 0715415854, 0770773051 & ssdigitals.shan@gmail.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org